தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேனீ வளர்ப்பு மையத்தை ஆய்வு செய்த கோவை மேயர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சியியல் துறையின் கீழ் தேனீ வளர்ப்பு மையம் செயல்பட்டு வருகின்றது. இங்கு இந்திய தேனீ, இத்தாலியத் தேனீ மற்றும் கொசுத் தேனீ என பல வகையான தேனீ வகைகள் வளர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பிற்கான பயிற்சியும் பல்கலைக்கழக வளாகத்திலேயே வழங்கப்பட்டு வருகின்றது. மாதந்தோறும் நடைபெறும் தேனீ வளர்ப்புப் பயிற்சியில் 40 முதல் 60 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுகின்றனர். கடந்த ஏழு ஆண்டுகளில் நடைபெற்ற பயிற்சிகளில் சுமார் 4,000 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இன்று (15-6-2016) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்த கோவை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் முனைவர் திரு. கணபதி பா. ராஜ்குமார் அவர்கள் பல்கலைக்கழக தேனீ வளர்ப்பு மையத்தை பார்வையிட்டார். அங்கு உள்ள பல வகையான தேனீக்களைப் பற்றியும் அவற்றின் வளர்ப்பு முறைகளைப் பற்றியும் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

தேனீ வளர்க்க பயன்படும் கருவிகளான தேனீ பெட்டிகள், தேன் பிரித்தெடுக்கப் பயன்படுத்தும் கருவிகள், புகைக் குழல், பாதுகாப்பு ஆடைகள் போன்றவற்றை ஆய்வு செய்தார். தேனீக்கள் தரும் பொருட்களான தேன், ராயல் ஜெல்லி, தேன் மெழுகு, மகரந்தம் மற்றும் தேனீ பிசின் ஆகியவை குறித்த தகவல்கள் பற்றி கேட்டறிந்தார்.

மேலும் தேனீக்களின் வாழ்க்கை நிலைகள், தேனீ குடும்பம், மகரந்தம் மற்றும் தேன் தரும் பயன்கள், தேனீக்களால் அயல் மகரந்த சேர்க்கை ஏற்பட்டு பயிர்களில் ஏற்படும் பெரும் விளைச்சல்கள் குறித்த கருத்துப் படங்களையும் பார்வையிட்டார்.

தேனீ வளர்ப்பு மற்றும் அதன் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு கொண்டு செல்லுமாறு கோவை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் முனைவர் திரு. கணபதி பா. ராஜ்குமார் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தேனீ வளர்ப்பு மையத்தினை கோவை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் முனைவர் திரு. கணபதி பா. ராஜ்குமார் அவர்கள் பார்வையிடும் போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி, பதிவாளர் முனைவர் கு.ரா. அனந்த குமார், ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. மகேஸ்வரன் மற்றும் பல்கலைக்கழக முதன்மையர்கள் மற்றும் பேராசிரியர்கள் உடன் இருந்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்